ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1866/6 - 2014 ජූනි මස 10 වැනි අඟහරුවාදා - 2014.06.10

*1866/6 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதிகள் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ், கெளரவ நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள சட்டத்தின் மூலம் காட்டப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*பி. எம். எஸ். பட்டகொட,*
*திறைசேரியின் பிரதிச் செயலாளர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2014, மே 30.*

*வர்த்தமானி அறிவித்தல்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல்*

*1. இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்ற பொருட்களின் பட்டியலை பகிரங்கப்படுத்தி 2013.06.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1813/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2013.07.09 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக:*

*2. இறக்குமதி செய்யப்படுகின்ற கறுவாவுக்காக இலங்கைத் தர நியமக் குறிப்பீட்டை கட்டாயப்படுத்தி 2013.06.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1813/ 15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2013.07.09 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*3. அரிசி ஏற்றுமதியை வரையறுப்பதற்கு விதிக்கப்பட்ட 2012, யூன் மாதம் 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1764/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து 2013.07.18 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1819/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2013.08.22 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*4. ஹய்ட்ரோ க்ளோரோ ப்ளோரோ காபன்* (HCFC) *இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுவதை அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தி 2013.08.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1821/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2013.09.03 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*5. பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்கள் கொண்டு செல்லல் ஆகிய நோக்கத்துடன் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் சம்பந்தமாக நிலவும் உத்தேச வகைப்படுத்தல் இலக்கங்களை நீக்கியும் புதிதாக உத்தேச வகைப்படுத்தல் இலக்கங்களை உள்ளடக்கியும் 2013.11.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1837/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2013.12.20 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*6. ஏற்றுமதி செய்யப்படுகின்ற கறுவாவுக்காக இலங்கைத் தர நியமக் குறிப்பீட்டை கட்டாயப்படுத்தி 2013.06.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1813/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அதனை நடைமுறைப்படுத்தும் திகதியை திருத்தி 2014.01.02 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1843/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2014.01.22 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*7. 123 இறக்குமதிப் பொருட்களுக்காக தர நியமக் குறிப்பீட்டை கட்டாயப்படுத்தி 2014.01.08 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1844/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி 2014.01.22 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*8. பொருட்களைக் கொண்டுசெல்லும் நோக்கத்துடன் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் சம்பந்தமாக நிலவும் உத்தேச வகைப்படுத்தல் இலக்கங்களை நீக்கியும் புதிதாக உத்தேச வகைப்படுத்தல் இலக்கங்களை உள்ளடக்கியும் 2014.01.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1846/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2014.03.04 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதாக.*

*06-730*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.